# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2009 ஆம் ஆண்டின் 63 ஆம் இலக்க, தாலியவக்க ஆனந்த விஹாரை கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2009, ஒற்றோபர் மாதம் 30 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 11.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2009 ஆம் ஆண்டின் 63 ஆம் இலக்க, தாலியவக்க ஆனந்த விஹாரை கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்**

[2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. (கூட்.) 17/2007

**தாலியவக்க ஆனந்த விஹாரை கலாசார மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

*முன்னுரை.*

“படல்கம தாலியவக்க ஆனந்த விஹாரை கலாசார மன்றம்” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக் கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் குறிக்கோள்களையும் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இலங்கையில் தாபிக் கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல் வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகர மாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ் விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காக இருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம், 2009 ஆம் ஆண்டின் 63 ஆம் இலக்க, தாலியவக்க ஆனந்த விஹாரை கலாசார மன்றம் (கூட்டிணைத் தல்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*தாலியவக்க ஆனந்த விஹாரை கலாசார மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப் பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) “தாலியவக்க ஆனந்த விஹாரை கலாசார மன்றத்தின்” தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகை யோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) “தாலியவக்க

ஆனந்த விஹாரை கலாசார மன்றம்" என்ற பெயரின்கீழும் மகுடத்தின் கீழும் இடையறாவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதாயிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைத்துருவாக்கப்பட்ட பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டத்தால் அல்லது அதன்கீழ் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையென வெளிப்படுத்தப்பட்ட பௌத்த மத முக்கியத்துவம் கொண்ட தலங்களையும் அவற்றுடன் தொடர்புபட்ட சகல புராதன பொருட்களையும் பேணிப் பாதுகாக்கவும் அவற்றின் அபிவிருத்திக்கு சகல வழிகளிலும் உதவியும் ஒத்தாசையும் வழங்கல் ;

(ஆ) பாராளுமன்றத்தினால் ஆக்கப்பட்ட சட்டத்தால் அல்லது அதன்கீழ் தேசிய முக்கியத்துவம் வெளிப்படுத்தப்பட்ட இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கான அவசியம் தொடர்பில் பௌத்தமதத்தை அனுசரிப்பவரிகளிடையே சூழலுக்கு இயைந்த நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதலும் விழிப்புணர்வை அதிகரிப்பதற்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதலும் ;

(இ) வீடமைப்பு வசதிகளைப் பெறுதல் தொடர்பில் பௌத்த மதத்தை அனுசரிப்போர் பொருளாதார ரீதியில் பிரதிகூலமான விவசாய குடும்பங்களுக்கு உதவி அளித்தல் ;

(ஈ) பௌத்த மதத்தை அனுசரிப்பவர்களுக்கெனத் தாபிக்கப்பட்டவையும் கஷ்ட நிலையில் இயங்கிவருபவையுமான பாலர் பாடசாலைகளை புனரமைப்பதற்குத் தேவையான மூலப் பொருட்களை வழங்குதலும் மற்றும்

அத்தகைய பாலர் பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளில் தகைமை வாய்ந்த ஆசிரியர்களை ஊக்குவித்தலும்;

(உ) பௌத்த மதத்தை அனுசரிப்பவர்களிடையே தொழிலற்ற இளைஞர்களின் நலனுக்கென தொழிற்பயிற்சி பயிற்சி நிலையங்களைத் தாபித்தல் ;

(ஊ) பௌத்த மதத்தை அனுசரிப்பவர்களான குறைந்த வருமானத்தைப் பெறும் மக்கள் குழு பெரும்பான்மையாக இருக்கின்றவிடத்து அவர்கள் வாழும் கிராமங்களிலுள்ள வழிபாட்டுத் தலங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் பௌத்த மதத்தை அனுசரிப்பவர்களிடையே மதக் கல்வியை மேம்படுத்துவதற்கு உதவி வழங்குதல் ;

(எ) வன வளங்களை பாதுகாப்பதற்காக பௌத்த மதத்தை அனுசரிப்பவர்களுக்கான சமுதாய நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், சமுதாய வன மீள்நடுகை வேலைத் திட்டங்களுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் உதவி வழங்குதல் அத்துடன் பாராளுமன் றத்தால் ஆக்கப்பட்ட சட்டத்தால் அல்லது அதன்கீழ் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையென வெளிப்படுத்தப்பட்ட மண் வளமூட்டப்படலை குறைப்பதைத் தடுப்பதற்கு இயற்கையான மண் பேணிக்காத்தல் முறைகளை ஊக்குவிக்கும் அதேவேளை பௌத்த மதத்தை அனுசரிப்பவர்களிடையே நவீன மண் பேணிக்காத்தல் முறைகளை அறிமுகஞ்செய்தல் ; அத்துடன்

(ஏ) பாராளுமன்றத்தால் ஆக்கப்பட்ட சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததென வெளிப்படுத்தப்பட்ட உள்ளூர் கமச்செய்கை நோக்கத்துக்குத் தேவையான குளங்கள், அணைக் கட்டுகள் என்ப வற்றை மறுசீரமைத்தல்.

ஆதனங்களைக், கொள்ளுவதற்கு, நிதிகளை முதலீடு செய்வதற்கு மற்றும் கடன்களைத் திரட்டுவதற்குமான கூட்டுத்தாபனத்திற்குள்ள தத்துவம்.

*4*. இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய,-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படும் காணிகளை அல்லது கட்டிடங்களைக் கொண்டு வைத்திருப்பதற்கும், கொள்வனை செய்வதற்கும், வாடகைக்கு விடுவதற்கும், நிறுவுவதற்கும் அல்லது வேறு வகையில் பெறவும் ;

(ஆ) நிறைவேற்றுக்குழுவின் அங்கீகாரத்துடன் கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக அரசின் அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் வேறு (உள்நாட்டு, வெளிநாட்டு) நிறுவனங்கள் என்பவற்றிலிருந்து பணத்தைக் கடனாகப் பெறுதலும் அல்லது பணத்தைத் திரட்டுதலும் ;

(இ) நாணய மாற்றுண்டியல்கள், காசோலைகள், உறுதிப் பத்திரங்கள், அத்துடன் வேறு கைமாற்றத்தகு சாதனங்களைத் தயாரிக்கவும் வரையவும், கையேற்கவும், கழிவுகளை வழங்கவும், புறக்குறிப்பிடவும், கைமாற்றவும், கொள்வனவு செய்யவும், விற்பனை செய்யவும், வழங்கவும் அத்துடன் வங்கிக் கணக்குகளைத் திறக்கவும், செயற்படுத்தவும், பேணவும், முடிவுறுத்தவும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக உடனடியாக தேவைப்படாத ஏதேனும் நிதிகளை நிறைவேற்றுக்குழு பொருத்தமானதெனக் கருதும் வகையில் முதலீடு செய்வதற்கும் ;

(உ) சந்தாக் கட்டணங்கள், மானியங்கள், நன்கொடைகள் மற்றும் எல்லா வகையிலுமான கொடைகளைப் பரிந்து கேட்கவும், பெற்றுக்கொள்ளவும் ;

(ஊ) எவரேனும் ஆளுடன் ஏதேனும் கம்பெனியோடு அல்லது ஆட்கள் குழுவொன்றுடன் உடன்படிக்கைகள் அல்லது ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளவும் ;

(எ) கொள்ளப்பட்ட அல்லது கூட்டுத்தாபனத்தின் உடமையிலுள்ள ஏதேனும் ஆதனத்தை அல்லது ஆளுக்குரிய ஆதனத்தைப் பாதிக்கின்ற எவையேனும் சட்டமுறையான நம்பிக்கைப் பொறுப்புக்கள் மற்றும் நிபந்தனைகளைப் பொறுப்பேற்றலும், ஏற்றுக்கொள்ளுதலும் எழுதிநிறைவேற்றுதலும் புரிதலும், நிர்வகித்தலும் ;

(ஏ) கூட்டுத்தாபனத்தின் அலுவலர்கள் மற்றும் சேவையாளர்களை நியமனம் செய்யவும், தொழிலில் அமர்த்தவும், பதவி நீக்கஞ் செய்யவும், அவர்களின் சேவையை முடிவுறுத்தவும், கூட்டுத்தாபனத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய சம்பளங்கள், படிகள், பணிக்கொடைகள் என்பவற்றைக் கொடுப்பனவு செய்யவும் ;

(ஐ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்காக இலங்கையில் அல்லது வெளிநாடுகளில் ஆளணியைப் பயிற்றுவிக்கவும் ; அத்துடன்

(ஒ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை முறையாகவும் பயனுறுதியாகவும் நிறைவேற்ற அவசியமான அல்லது உசிதமான வேறு எல்லா கருமங்களையும் செய்வதற்கும்,

கூட்டுத்தாபனம் தத்துவம்கொண்டதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், நிறைவேற்றுப் பணிப்பாளர், தலைவர், செயலாளர், பொருளாளர், உபதலைவர், நிருவாக மற்றும் விளம்பரச் செயலாளர் உதவிச் செயலாளர் மற்றும் இணைச் செயலாளர்கள் மூவரையும் கொண்ட நிறைவேற்றுக்குழு ஒன்றினால், 8 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கான விதிகளுக்கமைய நிருவகிக்கப்படல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது நிறைவேற்றுக்குழு இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகிக்கும் மன்றத்தின் நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் வருமானம் மற்றும் ஆதனத்தின் பிரயோகம்.*

**6.** கூட்டுத்தாபனத்தின் வருமானமும் ஆதனமும் இதன்கண் தரப்பட்டுள்ள குறிக்கோள்களை முன்னெடுத்துச் செல்வதற்கு மாத்திரமே பிரயோகிக்கப்படல் வேண்டும் என்பதுடன் அதன் பாகம் எதுவும் பங்கிலாபம், கடன், மிகையூதியம், இலாபம் என்ற வகையில் அல்லது வேறு வகையில், கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்கு நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

**7.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், நன்கொடை, இறுதி விருப்பாணக் கையளிப்பு கைமாற்றுதல், உதவுதொகை அல்லது கட்டணங்களாகக் கிடைக்கும் எல்லாப் பணங்களும், நிறைவேற்றுக்குழு தீர்மானிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் பெயரில் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தைப் புனரமைப்பதற்காகவும் சீர்திருத்துவதற்காகவும் அபிவிருத்தி செய்வதற்காகவும் ஏதேனும் பெறுமானத் தேய்வு நிதியம் அல்லது ஒதுக்கு அல்லது கடனாழ் நிதியத்தை நிறைவேற்றுக்குழு உருவாக்கலாம்.

(3) இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் செலவினமாக உறப்படக்கூடியவாறான அத்தகைய எல்லா பணத்தொகையும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**8.** (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மைகொண்டு, பின்வரும் கருமங்களுக்காக இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், அத்துடன் உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல் அல்லது அவர்களை அகற்றுதல் ;

(ஆ) பதவி தாங்குநர்களை தேர்ந்தெடுத்தல், அவர்கள் பதவி நீக்குதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் மற்றும் அவர்களின் தத்துவங்கள், நடத்தை அத்துடன் கடமைகள் ;

(இ) நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், நிறைவேற்றுக்குழுவின் தத்துவங்கள், நடத்தை, கடமைகள் மற்றும் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களின் பதவிக்காலம் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் தத்துவங்கள், நடத்தை, கடமைகள் மற்றும் பணிகள் ;

(உ) நிறைவேற்றுக்குழு மற்றும் பேரவையின் கூட்டங்களைக் கூட்டுதலிலும் நடாத்துதலிலும் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையும், அத்தகைய கூட்டங்களின்

நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சி நிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும் அத்துடன் அதன் நிதியத்தைக் கட்டுப்பாப்பில் வைத்து இருத்தலும் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளைப் பேணுதலும் கணக்காய்வு செய்தலும் ;

(எ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்துததற்காகவும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றைப்போன்று அதே முறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்த்துக்கொள்ளப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கு அமைந்தோராதல் வேண்டும்.

**9**. (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும் ; கணக்குகளும், கணக்காய்வும்.

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும் ;

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் ஒரு தகைமை பெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(4) இப்பிரிவில், "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது,–

(i) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறே

தேனும் நிறுவனத்தில் உறுப்பினராகவுள்ள வரும், கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக அந்நிறுவனத்தால் அல்லது பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள ஒருவர் ; அல்லது

(ii) ஏதேனும் கணக்காளர் குழுமமொன்றின் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின், உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவனத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவனத்தின் பேரவையினால், கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று

எனப் பொருள்படும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**10**. கூட்டுத்தாபனமானது, கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக் கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறு வகையில் கையுதிர்க்க கூட்டுத்தாபனமானது முழுத்தத்துவம் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் இலாபம் ஈட்டாத ஒழுங்கமைப்பாக இருத்தல் வேண்டும்.

**11**. கூட்டுத்தாபனம் இலாபம் ஈட்டாத ஒழுங்கமைப்பாக இருத்தல் வேண்டுமென்பதுடன் கூட்டுத்தாபனத்தின் ஈட்டம் இலாபம் அல்லது பங்கிலாபம் ஏதேனுமிருப்பின், அதன் எப்பகுதியும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது.

**12.** இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு நேர் முந்திய நாளன்று மன்றத்திற்குரிய எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும், இத்தால் அமைத்துருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாக வுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படுவதற்குரிய ஒப்பப் பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*மன்றத்தினால் செலுத்தப்படவுள்ள தனிசுளும் மன்றத்திற்குச் செலுத்தப்படவுள்ள தனிசுகளும்.*

**13.** கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் எவரும் கூட்டுத்தாபனத் தின் தனிசுகளையும் பொறுப்புகளையும் தீர்க்கும் நோக்கத்திற்காக அல்லது வேறு ஏதேனும் நோக்கத்திற்காக அத்தகைய உறுப்பின ரின் உறுப்பாண்மைக் கட்டணமாக வருமதியான தொகையை விஞ்சிய உதவுதொகை எதனையும் செய்வதற்குப் பொறுப்புடைய வராதலாகாது.

*உறுப்பினர்களின் பொறுப்புகளை வரையறுத்தல்.*

**14.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது நிறைவேற்றுக் குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் என்பதுடன், பணிப்பாளர் சபையின் தலைவர் மற்றும் ஓர் உறுப்பினரின் முன்னிலையி லன்றி இலச்சினையானது எத்தகையதுமான எச்சாதனத்திலும் பொறிக்கப்படுதலுமாகாது. அவர்கள் சமூகமாயிருந்ததைக்கு அடையாளமாக, அச்சாதனத்தில் தங்கள் பெயர்களைக் கையொப்பமிடல் வேண்டும். அத்தகைய கையொப்பமிடலானது எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**15.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல் அதன் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் கொடுத்துத் தீர்க்கப்பட்டபின்னர் எத்தன்மைத்தான ஆதனம் எதுவும் எஞ்சியிருந்தால், அத்தகைய ஆதனமானது கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந் தளிக்கப்படுதலாகாது ; ஆனால் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள் களை ஒத்த குறிக்கோள்களை உடையதும் அல்லது உடையனவும், அதன் அல்லது அவற்றின் விதிகளின்படி அதன் அல்லது அவற் றின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளித்தல் தடைசெய்யப்பட்டுள்ளதுமான அல்லது தடை செய்யப்பட்டுள்ளனவுமான வேறு நிறுவனத்திற்கு

*கலைக்கப்பட்டதன் மேல் எஞ்சியிருக்கும் ஆதனம்.*

அல்லது நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். அத்தகைய நிறுவனமானது அல்லது நிறுவனங்களானவை கூட்டுத்தாபனம் கலைக்கப்படும் நேரத்தில் அல்லது நேர்முன்னர் முகாமைக் குழுவால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

*குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**16**. இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உாமைகளையேனும், பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**17**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*